1990 ஏப்ரல் 10]

9-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் வினாவிற்கு விடை, மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த வழித் தடத்தில் பயணம் செய்கின்ற பயணிகளுடைய விகிதாச்சாரம் குறைவாக இருக்கிற தென்று கணிக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பேருந்துகள் விடுவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மீண்டும் அது சர்வே செய்யப்பட்டு, தேவைப்படின் பேருந்து களை விடலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விடப்படும் விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய திரிசூலம் விமான நிலையத்தில் ஒரு ரிசர்வேஷன் கவுண்டர் அமைத்து, விமான நிலையத்திலிருந்து இறங்கிச் செல்கின்ற லட்சக் கணக்கான பயணிகள் அங்கேயிருந்து அவரவர்கள் இல்லங் களுக்குச் செல்ல வசதி செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவிற்குத் தொடர்பற்றது.

குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள்.

*2640ஏ—திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுற்றுலாத் துறையினரால் சுற்றுலாப் பயணிகளுக்கு குற்றாலத்தில் என்னென்ன வசதிகள் மேற்கொள்ளப்படவிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 7.97 இலட்சம் செலவில் சுற்றுலாத் துறையின் மானியத்தால் கட்டப்பட்டு, நகரியத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் 'அருவி இல்லத்தை' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக்கொண்டு, அதனை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, ''மல்லிகை இல்லத்தையும்'' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக் கொள்ளும் கருத்துருவும் பரிசீலனையில் உள்ளது. மேலும், கூடுதலாக ஒரு சுற்றுலா விடுதியும் இங்கு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குற்றாலத்திலே குளிப்பதைத் தவிர வேறு பொழுதுபோக்கு ஒன்றுமில்லை. ஆகவே திருக்குற்றலாத்திலிருந்து ஐந்தருவி வரையிலே சென்று வருவதற்கு சிறுவர்கள் இரயில் ஒன்று விடப்படுமா? இரண்டாவதாக, சீசன் காலத்திலே, 3 மாதங்களுக்கு ஒலி-ஒளிக் காட்சியை அங்கே அமைக்கும் உத்தேசம் அமைச்சரவர்களுடைய சுற்றுலாத் துறைக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற 5 அருவிகளில், ஏனைய அருவிகளையும் சேர்த்துச் சொல்கிறேன், சிற்றருவி, லோயர் பால்ஸ் ஆகிய அனைத்து அருவிகளிலும் குளித்தாலே நேரம் போய்விடும். அதற்குமேலே ஒலி-ஒளிக் காட்சி அமைக்கும் திட்டம் இப்போது இல்லை. சிறுவர் இரயில் விடும் திட்டமும் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய குற்றாலம் பகுதிகளிலே தங்குவதற்கான குடில்களும் இல்லை, தங்குகின்ற விடுதிகளும் இல்லை. ஆகவே குளிக்கப் போகின்றவர்களுக்கு இங்கே தங்குகின்ற விடுதிகளையும், குடில்களையும் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகினே.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, நிச்சயமாக அந்த வசதிகள் அங்கே செய்து தரப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்த, வனப்புடன் விளங்கிய சிறுவர் பூங்காவானது ஒளி இழந்து பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அது சீரமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர் பூங்கா சுற்றுலாத் துறையினுடைய பராமரிப்பில் இல்லை. நகரியத்தினுடைய பராமரிப்பில் இருக்கலாம் என்று கருதுகின்றேன். அது பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தான் பதில் அளிக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

சுற்றுலா மையம்.

* 4526—திரு. மு. இராமநாதன்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: